# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**


<u>ஆணை நாள்  17.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 61/B/19</u>**

திரு எம். ஜோஸ்வா — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு எம். ஜோஸ்வா மற்றும் பொது தகவல் அலுவலர், திரு ட்டி. செந்தில்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 23.11.2018 தேதியிட்ட மனுவில், திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், பாண்டேஸ்வரம் முதல் நிலை ஊராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வசதி திட்டம் 2015-2016, கிராம ஊராட்சி சேவை மைய திட்டம் தொடர்பாக தகவல்கள் கோரி வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பிக்காமலும், பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு விண்ணப்பிக்காமலும், நேரடியாக 24.01.2019 தேதியிட்ட பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி மனுதாரரின் புகார் மனுவின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் தான் கோரிய தகவல்கள் பொது தகவல் அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், ஆகையால்

மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்றும் தெரிவித்ததன் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 61/B/19**
**பெறுநர்**
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திரு எம். ஜோஸ்வா,
த/பெ கே. முருகன்,
ஆ/32, எண் 29, நேதாஜி தெரு,
பாண்டேஸ்வரம்,
சென்னை 600 055.

Copy to: File
SCPA-19.11.20